**கடையநல்லூர் நகர்மன்றத்தின் அவசரக் கூட்டம்– 2021ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 11.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது. அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.**

**பொருள் எண்.1**

கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.27, வடக்கு ரத வீதி கடையநல்லூர் நகரளவை சர்வே வார்டு J, பிளாக்.32 நகரபுல எண்.32ல் மொத்த விஸ்தீரணம் 1.17.50 ஹெக்டேர் ''சர்க்கார் புறம்போக்கு – பாட்டை'' என நிலவகைப்பாடு செய்யப்பட்டு இந்நகராட்சியின் கட்டுப்பாட்டிலும் பராமரிப்பிலும் அமைந்துள்ள (Government Vested Municipality) பிரஸ்தாப புலத்தில் 200.00ச.மீ பரப்பளவில் கடையநல்லூர் குறுவட்ட அளவர் குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்கு நிலமாற்றம் செய்வதற்குரிய பிரேரணையின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஏதுவாக இந்நகராட்சியின் ஆளுகையிலிருந்து விடுவித்து தடையின்மைச் சான்று வழங்குதல் தொடர்பான தீர்மானம் நிறைவேற்றி அதன் நகலினை அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) தென்காசி, அவர்களின் கடிதம் ந.க.எண்.ஜி3/3049/2019, நாள்.10.02.2021 மற்றும் 02.08.2021களின்படி தெரிவக்கப்பட்டுள்ளது.

கடையநல்லூர் குறுவட்ட அளவர் குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்கு தற்போது மாற்று இடமாக இந்நகராட்சி பொறியாளர் குடியிருப்பு பகுதியின் மேற்கு பக்கமுள்ள காலிமனை தெரிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட பிரஸ்தாப நிலத்துடன், மேற்கண்ட இடத்திற்கு பிரதான அணுகுபாதையாக நிலையிலுள்ள தென்வடல் சாலையிலிருந்து கிழமேலாக நகராட்சி பொறியாளர் குடியிருப்புக் கட்டிடத்தின் வடபகுதிக்கும் மற்றும் வளமீட்பு மையம் (Resource Recovery Centre) கட்டிடத்திற்கும் இடைப்பட்ட பகுதியினை அணுகுபாதையாக பயன்படுத்தும் வகையில் ஒருங்கிணைக்கப்பட்ட பகுதியாக பிரஸ்தாப புலம் அமைந்துள்ளது. எனவே மேற்கண்ட பிரஸ்தாப புலத்தினை ஒட்டி அமைந்துள்ள இந்நகராட்சி பொறியாளர் குடியிருப்பு பகுதிக்கு பாதிப்புகள் ஏற்படாத வகையில் கடையநல்லூர் குறுவட்ட அளவர் குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்கு நிலமாற்றம் செய்வதற்குரிய தடையின்மை சான்று வழங்குவது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

**(ந.க.எண். 923/ 2021/எப்1)**

**தீர்மான எண். 560**

மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) தென்காசி அவர்களின் 10.02.21 மற்றும் 02.08.21ம் தேதிய கடிதங்களின்படி, மேற்படி பிரஸ்தாப புலத்தில் கடையநல்லூர் குறுவட்ட அளவர் குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்கு நிலமாற்றம் செய்வதற்குரிய தடையின்மை சான்று வழங்க அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.2**

கடையநல்லூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கும் வாகனம் TN 6P 2758 வாகனத்தின் டம்பர் பின்கள் (டப்பாக்கள்) அனைத்தும் சேதமுற்று திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்க்கொள்ள இயலாத அளவிற்கு தூர் பகுதியும், சைடு பகுதியும் சேதமாகி உள்ளது இந்நிலையில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்க்கொள்வதில் தொய்வு மற்றும் மிகுந்த சிரமம் ஏற்ப்படுகின்றது. ஆகவே பொது சுகாதாரப் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி TN76P 2758 டிப்பர் வாகனத்திற்கு புதிதாக கூண்டு (Body) அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.700000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவினத்தொகையினை இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் அகீரத்திற்காக.

**(ந.க.எண். 3664/ 2021/இ1)**

**தீர்மான எண். 561**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.3**

கடையநல்லூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.24 கடகாலீஸவரர் கோவில் தெரு கதவு எண்.20, வரிவிதிப்பு எண்.141/20656 கொண்ட நாகம்மாள் திருமண மண்டபம் கட்டிடம் தொடர்பாக திரு.தங்கமணி என்பவரால் இரண்டாவது மேல்முறையீடு S.A.(MD)No.145/2021 தொடரப்பட்டுள்ளது.

மேற்படி வழக்குக்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.10000/– வழக்கறிஞர் திரு.ராஜராஜன் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 2639/ 2020/அ1)**

**தீர்மான எண். 562**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.4**

இந்நகராட்சியின் வருவாய்வரத்தக்க குத்தகை இனத்தின் 2021–2024ம் ஆண்டுக்கான குத்தகை உரிமத்தின் 7வது பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தென்காசி வழியாக தினகரன் நாளிதழில் 30.07.2021 அன்று விளம்பரம் செய்த வகைக்கு கல்பப்ளி கேசன்ஸ்(பி) லிமிடேட், திருநெல்வேலி பட்டியல் எண்.3300288883 நாள்.30.07.2021ன்படி தொகை ரூ.31449.60 (முப்பத்தி ஒராயிரத்து நானூற்றி நாற்பத்தி ஒன்பது ரூபாய் அறுபது பைசா–ஐ வழங்க மன்றத்தின் அங்கீகாரத்திற்கு. மேலும் அவசர அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் பேரில் மேற்கண்ட நாளிதழுக்கு பட்டியல் தொகை வழங்க நடவடிக்கை மேற்கொண்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 4959/ 2020/அ1)**

**தீர்மான எண். 563**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.5**

கடையநல்லூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் ஆறு துப்புரவு பணியாளர் பணியிடம் 1.10.2013 முதல் 30.9.2014 வரை நீடிப்பு செய்வதற்கு கூடுதல் இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை மூ.மு.41626/2013/ஜே3 நாள்.27.11.2013.ன்படி அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

கடையநல்லூர் நகராட்சி 33 வார்டுகளை உள்ளடக்கியதில் அன்றாடம் சேகரம் ஆகும் கழிவுகளை உரக்கிடங்கிற்கு எடுத்துச்செல்லவும், திடக்கழிவு மேலாண்மை பணிகளை உடனுக்குடன் செயல்படுத்திடவும் மேற்படி துப்புரவு பணியாளர் பணியிடம் அத்தியாவசியமாக தேவைப்படுவதால் 1.10.2014 முதல் 30.09.2021 வரை நீடித்து வைத்துக் கொண்டதற்கு பின்னேற்பும் 1.10.2021 முதல் 30.09.2022 வரை ஓராண்டுக்கு காலநீடிப்பு ஆணை பெற நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு உரிய செயற்குறிப்பினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் வழியாக சமர்ப்பிக்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.3993/2021/சி1)**

**தீர்மான எண். 564**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.6**

கடையநல்லூர் நகராட்சி பொதுப்பிரிவில் மூன்று வருவாய் உதவியாளர் பணியிடம் 01/10/2016 முதல் 30.9.2017 வரை நீடிப்பு செய்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை மூ.மு 27308/2016/எச்1 நாள் 21/10/2016.ன்படி அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

கடையநல்லூர் நகராட்சிப்பகுதி 33 வார்டுகளை உள்ளடக்கியும், சுமார் 30000 சொத்துவரி விதிப்புகள் கொண்டுள்ளதாகவும் உள்ளது. அதற்காக வரிவசூல் பணியினை துரிதப்படுத்தி வசூல் பணியினை மேம்படுத்துவதற்கும் மேற்படி வருவாய் உதவியாளர் பணியிடம் அத்தியாவசியமாக தேவைப்படுவதால் 1.10.2017 முதல் 30.09.2021 நீடிப்பு செய்ததற்கு பின்னேப்பும் மற்றும் 1.10.2021 முதல் 30.09.2022 வரை ஓராண்டுக்கு காலநீடிப்பு ஆணை பெற நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு உரிய செயற்குறிப்பினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் வழியாக சமர்ப்பிக்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது

**(ந.க.எண்.3993/2021/சி1)**

**தீர்மான எண். 565**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.7**

கடையநல்லூா் நகராட்சி பொறியியல் மற்றும் குடிநீா் பிரிவில் உள்ள கீழ்கண்ட பணியிடங்கள் **01/10/2012** முதல் **30/09/2013** வரை நீடிப்பு செய்வதற்கு நகராட்சி நிா்வாக ஆணையா், சென்னை அவா்களின் செயல்முறை மூ.மு.**16662/2009**/எப்**3** நாள்.**27.10.2012**.ன்படி அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

**1.**பொறியாளா் நிலை – III
**2.**மின்பணியாளா் நிலை – I
**3.**மின்பணியாளா் நிலை – II
**4.**குடிநீா் குழாய் பொருத்துநா் நிலை– I
**5.** குடிநீா் குழாய் பொருத்துநா் நிலை– II

கடையநல்லூா் நகராட்சி மேற்கண்ட பணியிடங்கள் மக்களின் அன்றாட குடிநீா் தேவையினை நிவா்த்தி செய்யும் அத்தியாவசியமான பணியிடமாக உள்ளதால் **1/10/2013** முதல் **30/09/2021** வரை நீடிப்பு செய்ததற்கு பின்னேப்பும் **1.10.2021** முதல் **30.09.2022** வரை ஓராண்டுக்கு காலநீடிப்பு ஆணை பெற நகராட்சி நிா்வாக ஆணையா், சென்னை அவா்களுக்கு உரிய செயற்குறிப்பினை நகராட்சி நிா்வாக மண்டல இயக்குநா், திருநெல்வேலி அவா்களின் வழியாக சமா்ப்பிக்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.3993/2021/சி**1)

**தீா்மான எண். 566**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்.8**

கடையநல்லூா் நகராட்சி வாா்டு எண்.**4** பாரதியாா் தெருவில் உள்ள சிறு மின் விசைபம்பு **(Sintex)** குடிநீா் தொட்டி பழுதடைந்து கடந்த **2** வருடமாக பொதுமக்கள் அதிலிருந்து தண்ணீா் பெற முடியாமல் பயனற்றநிலையில் உள்ளதால் அதனை உடனே அகற்றி தருமாறு கோரிக்கை வைத்துள்ளனா். அதனடிப்படையில் இந்நகராட்சி மின்பணியாளா் மற்றும் இளநிலை பொறியாளா் நேரில் சென்று பாா்வையிடப்பட்டதில் சின்டெக்ஸ் தொட்டி பழுதடைந்தும் மற்றும் ஆழ்துளை கிணறு தூா்ந்து போய் உள்ளது. ஆகவே பயனற்று பழுதடைந்த நிலையில் பொது மக்களுக்கு பயன்படாத நிலையிலுள்ள ஆழ்துளை கிணறுடன் கூடிய சிறுமின் விசைபம்பு தொட்டியினை அப்புறப்படுத்த வேண்டி மன்றத்தன் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேலும் மேற்காணும் சிறுமின் விசைப்பம்பிற்கு வழங்கப்பட்டுள்ள மின் இணைப்பினை தமிழ்நாடு மின்சார வாரியம் கடையநல்லூா் மூலம் துண்டிப்பு செய்யவும் அதற்கான செலவினத் தொகைக்கும் அங்கீகாரத்திற்காக வைக்கப்படுகிறது.

**(ந.க.எண்.4071/2021/இ**1)

**தீா்மான எண். 567**

அனுமதிக்கப்பட்டது.

**(ஓம்)S.M.பாாிஜான்,**
**தனி அலுவலா் மற்றும் ஆணையா்,**
**கடையநல்லூா் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளா்,**
**கடையநல்லூா் நகராட்சி.**